1971 ஜூலை 10]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பணியாற்றுவதில் அவர்களுக்கு உள்ள இன்னல்களைப்பற்றி எல்லாம் ஆராய்ந்திருக்கிறார்கள். இதுபற்றியும் ஆராய்ந்திருக்கலாம். அவர்களது பரிந்துரைகளைப் பரிசிலனை செய்த பிறகே முடிவு எடுக்க முடியும்.

திரு. கோவை செழியன் : உட்கல், பகல்பூர் போன்ற பல கல்லூரிகளில் பெண்கள் சேர்ந்து படிக்காமலேயே ப்ரைவேட்டாகப் படித்து பரிட்சை எழுதலாம் என்று செய்திருக்கிறார்களே, அதுபோல தமிழ்நாட்டுக் கல்லூரிகளிலும் ஏற்படுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வேறுபல மாநிலங்களில் அத்தகைய வசதி இருப்பதைப்போன்று இங்கும் ஏற்படுத்தப் படவேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்து. இதுபற்றி பல்கலைக் கழகங்களுக்கு யோசனை கூறியுள்ளோம். மதுரை பல்கலைக் கழகம் தபால் மூலம் படிக்க வசதி ஏற்படுத்த அனுமதி கோரியது, அரசும் மதுரை பல்கலைக் கழகத்திற்கு அத்தகைய அனுமதியை அளித்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

Tahsildars for posts of Block Development Officers.

*182 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to select Tahsildars to fill up the posts of Block Development Officers in Rural Development Department; and

(*b*) if so, the percentage of such posts to be filled up?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Was there at any time any proposal that the Government would bring about a better understanding between the State Government headquarters here and block development department to see that this work done at block development is more effectively done and in view of the fact that there is another proposal to change the method of appointment which is now in vogue by giving better representation to high cadre officers being appointed to this job, will the Hon. Minister be pleased to tell us whether further reorganisation is going to take place in this department?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையினுடைய அமைப்புகள், பணிகள் ஆகியவற்றையெல்லாம் சீர்ப்படுத்தி, செம்மைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு நிர்வாக சீர்த்திருத்தக் குழுவினிடத்தில் விடப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளையெல்லாம் நன்கு ஆராயும்படி கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்தத் துறையில் இருக்கிற வல்லுநர்களும், அதிகாரிகளும் கூடிக் கலந்து பேசி, பொதுமக்களின் ஆலோசனைகளையும் கேட்டு, நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அங்கே இருப்பவர்களுடைய திறமையை நூற்றுக்கு நூறு பயன் படுத்துகிற அளவில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டிருக்கிறோம். உள்ளாட்சித் துறையின் அமைப்புகள் எல்லாம் சுமார் 10, 12 ஆண்டுகளுக்கு முன்னால் அமைக்கப்பட்டன. ஆகவே, பத்து, பன்னிரண்டு ஆண்டுகளின் அனுபவங்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு சிலபல சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்றுதான் இந்தக் குழுவினிடத்தில் விடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அவற்றையெல்லாம் நல்ல முறையில் ஆராய்ந்து பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்துக்கள் எல்லாம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நேராக பி.டி.ஓ.க்களாக பதவி பெற்று வருகிற நேரத்தில் அங்கே இருக்கிற பணிகளைப் புரிந்துகொண்டு அவர்களால் செய்ய முடியவில்லை. தாசில்தாராக இருக்கிறவர்கள் அந்த வட்டாரங்களைப்பற்றி நன்றாக அறிந்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற முடியும். மேலும் அவர்கள் ஆர்.டி.ஓ.க்களாக பிரமோஷன் பெறும் வாய்ப்பும் பெற்றிருக்கிறார்கள். மேலும் ஆர்.டி.ஓ.வின் கீழ் பல பிளாக்குகள் அடங்கி, அவையெல்லாம் அவருடைய கண்ட்ரோலில் இருக்கிறது. தாசில்தாராக இருக்கிறவர்கள் இரண்டு ஆண்டுக் காலம் பி.டி.ஓ.வாக இருந்து பின்னர் ஆர்.டி.ஓ.வாக வருகிற நேரத்தில் நல்ல முறையில் அந்த வட்டாரங்களுக்கு நல்ல பணிகளைச் செய்ய முடியும். ஆகவே, ஆர்.டி.ஓ.வாக நியமிக்கப்படுவதற்கு முன் அவர்கள் கட்டாயமாக இரண்டு ஆண்டுக் காலம் ஒரு பிளாக்கில் பணியாற்ற வேண்டுமென்று அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆரம்பகாலத்திலே இந்தத் துறை அமைக்கப்பட்டபொழுது வருவாய்த் துறையிலிருந்து அதிகாரிகளை ஈர்த்து வைத்து, கண்காணித்து வந்தோம். தாசில்தார் இரண்டு ஆண்டுக்காலம் பி.டி.ஓ..ஆக இருக்க வேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டது. இந்தத் துறையில் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு பதவி உயர்வும் கண்காணிக்கின்ற சூழ்நிலையும் தர வேண்டுமென்ற நிலை ஏற்பட்டது. இப்போது ஆர்.டி.ஓ. தலையீடு இருக்கிற காரணத்தினால்தான் உள்ளாட்சித் துறையை தனித்துறையாக ஆக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு, ஆதாரமாக பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய பார்வையின்கீழ் உள்ளாட்சித் துறை, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், இருக்க வேண்டும். பி.டி.ஓ.க்களை ஆர்.டி.ஓ.வின் கீழே வைக்கக்கூடாது. பி.டி.ஓ.க்களையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழே வைக்க வேண்டும் என்றெல்லாம் கருத்துக்கள் சொல்லப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் நிர்வாக சீர்திருத்தக் குழு ஆராய்ந்து தக்க முடிவு எடுக்கப்படும்.

Training for Dental Hygienists.

* 183 *Q.*—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Dental Wing of the Madras Medical College offers a course for Dental Hygienists under compulsory stipendiary training scheme;